Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 100-17 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | லீலாதேவி |
| Father's Name | -- | நித்யானந்தம் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 7th October 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது பொள்ளாச்சி வெங்கடேசா காலணியில் குடியிருந்துவருகிறேன். ஆஜர் எதிரி எனது கணவர் ஆவார். கடந்த 27.06.2017 அன்று மாலை 5.30 மணியளவில் சேரன் தொழிலாளர் காலணியில் வீட்டில் இருந்தபோது முந்தைய நாள் எனது மாமியார் எனது கணவரை அழைத்துக்கொண்டே இருந்ததால் அவர் கிளம்பிக் கொண்டிருந்தார். மாலை 5.30 மணிக்கு வந்தபோது மது அருந்திவிட்டு வந்திருந்தார். பணம் கேட்டு பிரச்சனை செய்ய ஆரம்பித்தார். எனக்கு அப்பா இறந்ததால் யாரிடம் கேட்க வேண்டும் என்று தெரியவில்லை. எனது அண்ணனிடம் கேட்குமாறு கூறினார். வாங்கித்தர இயலவில்லை என்றால் எதற்காக இருக்கிறாய் என்று கேட்டு என்னை பார்த்து கெட்டவார்த்தையில் பேசினார், (சாட்சி திறந்த நீதிமன்றத்தில் கற்றறிந்த எதிர்தரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் மேற்படி வார்த்தையை எழுதிக்காண்பிக்க அனுமதிக்கப்பட்டு அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) சண்டை அதிகமானதால் நான் ஹாலில் இருந்து கிச்சனுக்கு சென்றுவிட்டேன். அங்கிருந்த பொருட்களை எடுத்து என்னை அடித்தார். சமையலறைில் வைத்திருந்த கத்தியை எடுத்து எனது கையில் கீறினார். எனக்கு இரத்தம் வரஆரம்பித்தது. எனது முடியை பிடித்துவிட்டார். நான் கீழே விழுந்துவிட்டேன். எனது குழந்தைகள் தீபிகா, நிரஞ்சன்குமார் வந்து தடுத்தார்கள். என்னை தலையைபிடித்து கீழே அமுத்தி அடித்தார். என்னால் மூச்சுவிடமுடியாமல் எனக்கு நான் இறந்துவிடுவேனோ என்ற தோன்றியது. குழந்தைகள் எனது கணவரின் கையை இழுத்துவிட்டனர். நான்

படுக்கையறைக்கு சென்று தாழிட்டுக் கொள்ளலாம் என்று எத்தனித்த போது என்னை பிடித்து சுவரோடு தள்ளிவிட்டார். நான் தற்காத்துக் கொண்டேன். நான் குழந்தைகளை அழைத்துக் கொண்டு படுக்கையறைக்கு சென்று தாழிட்டுக் கொண்டேன். கதவை தட்டிக் கொண்டு சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். எனக்கு கேட்கவில்லை. சத்தம் அடங்கிய போது நான் மெதுவாக வெளியே வந்து பார்த்தேன்.. அவர் அறையில் மல்லாக்க படுத்திருந்தார். நினைவில்லையா என்று எனக்கு தெரியவில்லை. நான் மறுபடியும் படுக்கையறைக்கு சென்றுவிட்டேன். அதன்பின் 5 நிமிடத்தில் எதேச்சையாக எனது அண்ணன் லோகநாதன் பார்க்க வந்தபோது, என்னுடைய நிலையை பார்த்துவிட்டு ஏன் முன்பே கூறவில்லை என்று கூறி, எங்களை பொள்ளாச்சி அரசுமருத்துவமனைக்கு அழைத்து வந்துவிட்டார். அங்கே முதலுதவியாக சிகிச்சை எடுத்துக் கொள்ள சொன்னார்கள். மறுநாள் எனது மகளுக்கு பொதுத்தேர்வு என்பதால் நான் முதலுதவி சிகிச்சை மட்டும் எடுத்துக் கொண்டேன். அதன்பின் நான் எனது அண்ணன் வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் நான் பொள்ளாச்சி காவல்நிலையத்தில் இதுசம்பந்தமாக புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் அதசாஆ.2 ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

**ஒம்/-க.செல்லையா,பிஏ.,பிஎல்**

**நீதித்துறை நடுவர் எண்.2**

**பொள்ளாச்சி**